**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.42/2025**

**தேதி : 13.02.2026**

**(வா.சா.1 ) – திரு. ராமகிருஷ்ணன்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)**

1. நான் அரிசிக்கடை வைத்துள்ளேன். நான் அரிசிக்கடை வைத்துள்ளேன் என்பதற்கு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் கடையில் வைத்துள்ளேன். வழக்கில் அவ்வாறான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எந்த தேதியில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் என்றால் 15.02.2023 அன்று கடன் கொடுத்தேன். எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் 12.00 முதல் 1.00 மணிக்குள் கொடுத்தேன். என்னுடைய வீட்டில் வைத்துக்கொடுத்தேன்.

2. நான் பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதற்கும் எத்தனை நாட்களுக்கு முன்பாக பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார் என்றால் ஒரு வாரம் முன்பாக அவசரம் என்று சொல்லி கடன் கேட்டார். ஒரு வாரத்திற்கு முன்பு அவர் கடன் கேட்ட தேதியை என்னால் கூறமுடியுமா என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதி ஒரு வாரத்திற்கு முன்பாக என்னிடம் கடன் கேட்டார் என்பதை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.8,00,000/–ஐ எந்த வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேன் என்றால் அதனை நான் வங்கியில் இருந்து எடுத்துக்கொடுக்கவில்லை. வீட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தேன். அந்த தேதியில் வங்கியில் இருந்து எடுக்கவில்லை. எந்த தேதியில் வங்கியிலிருந்து பணத்தை எடுத்தேன் என்றால் நாங்கள் வரவு செலவிற்காக பணத்தை எடுப்போம், வைப்போம் அவ்வாறு குறிப்பிட்டுக் கூறமுடியாது.

3. என்னுடைய கணக்கிலிருந்து எடுத்துக்கொடுத்தேனா என் மனைவியின் கணக்கிலிருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் வங்கிக் கணக்கிலிருந்து எடுத்துக்கொடுக்கவில்லை. வரவு செலவின் மூலம் வந்த பணத்தைக்

கொடுத்தேன். எதற்காக அவ்வளவு தொகையை கையில் வைத்திருந்தேன் என்றால் வரவு செலவு இருப்பதாலும், அரிசி வியாபாரத்திற்காகவும் கையில் வைத்திருந்தேன். நான் கடன் கொடுத்ததாகச் சொல்லப்படும் தேதியில் முத்துக்குமாரின் மாத வருமானம் என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி முத்துக்குமாரின் சொந்த ஊர் தேனி மாவட்டத்தில் உள்ள அய்யம்பட்டி என்றால் சரிதான். பிரதிவாதி வேலை பார்ப்பதால் என் மைத்துனர் துரைச்செல்வத்தின் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார் என்றால் சரிதான்.

4. பிரதிவாதி 2015 முதல் 2021 வரை என் மைத்துனரின் வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தார் என்றால் சரிதான். அவர் வாடகைக்குக் குடியிருக்கும் வீட்டின் அருகில்தான் என் வீடு என்றால் சரிதான். அவர் வெளியூர் செல்லும் சமயங்களில் வீட்டின் சாவியை என்னிடம் கொடுத்துச் செல்வார் என்றால் சரியல்ல. கொரானா சமயத்தில் பிரதிவாதி கேரளாவில் இருக்கும் அவரது மாமனாரின் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் அவர் எங்கு சென்றார் என்று எனக்குத் தெரியாது. கொரானா தொற்று ஏற்பட்ட சமயம் பிரதிவாதி பழனியில் இல்லை என்றால் அந்தச் சமயம்தான் வீட்டை காலி செய்து சென்றார்.

5. கொரானா வந்த சமயம் பிரதிவாதி அவருடைய மாமனார் வீட்டிற்கு சென்றபோது வீட்டின் சாவியை என்னிடம் கொடுத்துச்சென்றபோது நான் அவர் வீட்டிலிருந்து அசல் ஆவணங்களை மூன்றையும், காசோலைகள் மூன்றையும் எடுத்துக்கொண்டதாகச் சொன்னால் சரியல்ல, அந்த வீட்டின் சாவியே என்னிடம் இல்லை. பிரதிவாதிக்கும், என் மைத்துனருக்கும் இடையே ஏற்பட்ட பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பத்தை வைத்து பிரதிவாதியின் கையொப்பத்தை உற்பத்தி செய்து ஆவணங்கள் தயாரித்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல, அவ்வாறான வாடகை ஒப்பந்தத்தையே நான் பார்க்கவில்லை.

6. பிரதிவாதி அசல் ஆவணத்தை என்னிடம் பொறுப்புக்காகக் கொடுத்ததாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாகச் சொல்லும்போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் எழுதியதும், சாட்சியுமான சிவக்குமார், சாட்சியாக ராமராஜ் ஆகியோர் உடனிருந்தார்கள். கடனுறுதிச் சீட்டு வெள்ளைத்தாளில் எழுதப்பட்டதா, காங்கர் பேப்பரில் எழுதப்பட்டதா என்றால் காங்கர் பேப்பரில் எழுதப்பட்டது. கடனுறுதிச் சீட்டை யார் கொண்டுவந்தார்கள் என்றால்

முத்துக்குமார் கொண்டுவந்தார். சாட்சிகள் இருவரையும் நான் அழைத்தேனா என்றால் ஆம்.

7. சிவக்குமார் முதலில் வந்தாரா, ராமராஜ் முதலில் வந்தாரா என்றால் சிவக்குமார் முதலில் வந்தார். சிறிது நேரத்திலேயே ராமராஜும் வந்துவிட்டார். கடனுறுதிச் சீட்டில் முதலில் கையொப்பம் செய்தது யார் என்றால் சிவக்குமார் முதலில் கடனுறுதிச் சீட்டை எழுதினார். சாட்சியாக ராமராஜ் கையொப்பம் செய்தார். கடனுறுதிச் சீட்டில் முதலில் கையொப்பம் செய்தது யார் என்றால் முத்துக்குமார் முதலில் முத்திரை வில்லையில் கையொப்பம் செய்தார். அதன்பிறகு சாட்சி ராமராஜ் கையொப்பம் செய்தார். மேலும் அவர் நான்கு கட்டங்களிலும் ரேகை வைத்தார்.

8. கடனுறுதிச் சீட்டுவதற்கு விபரங்கள் நான் சொன்னேனா என்றால் நான் என்னுடைய முகவரியைச் சொன்னேன், முத்துக்குமார் அவருடைய முகவரியைச் சொன்னார். மற்ற விபரங்கள் யார் சொன்னார்கள் என்றால் கடனுறுதிச் சீட்டு பிரிண்டேடு பார்மாக இருந்தது. கடனுறுதிச் சீட்டில் தமிழ் தேதியை யார் சொன்னது என்றால் காலண்டரைப் பார்த்து நாங்கள்தான் சொன்னோம். பிரதிவாதி என்னிடம் எந்தத் தொகையும் கடனாகப் பெறவில்லை என்றும், கடனுறுதிச் சீட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டில் இருப்பது பிரதிவாதியின் கையொப்பம் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

9. ரூ.8,00,000/- கடன் கொடுக்கும் அளவுக்கு என்னிடம் வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல, என் மனைவியும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வேலை பார்க்கிறார். நான் எவ்வளவு தொகை கொடுத்தேன், என் மனைவி எவ்வளவு தொகை கொடுத்தார் என்றால், நான் ரூ.4,00,000/-மும், என் மனைவி ரூ.4,00,000/-மும் சேர்த்துக் கொடுத்தோம். என் மனைவி வருமான வரி செலுத்துகிறாரா என்றால் செலுத்துகிறார். ரூ.4,00,000/- கடன் கொடுத்ததை என் மனைவி அவரது வருமான வரிக்கணக்கில் காட்டியுள்ளாரா என்றால் வீட்டுச் செலவிற்காக எடுத்து வைத்திருந்த பணத்தைத்தான் கொடுத்தேன். நான் சொல்லும் தேதியில் ரூ.8,00,000/- ம் கடன் வாங்க வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் அவர் காடு வாங்க வேண்டும் என்பதற்காக கடன் வாங்கியுள்ளார்.

10. என்னுடைய பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள வட்டி விகிதம் தவறானது என்றால் சரியல்ல. நான் மோசடியாக கடனுறுதிச் சீட்டை

**உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> :– இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K. BHARATHI Digitally signed by K. BHARATHI Date: 2026.02.13 17:53:52 +0530

Additional Sub Judge,
Palani.